# DEPOSITION OF WITNESS

## (Chapter of XXIII, Criminal Procedure Code)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.

**Spl.S.C.No. 1/2024**
PROSECUTION WITNESS No.14

| | |
|---|---|
| Name | : Dr.Basker |
| Father's Name | : Marimuthu, |
| Age | : |
| Address | : |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 17th day of September, 2025.

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது அயனாவரம் இ எஸ் ஐ மருத்துவமனையில் RMO ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.01.2012 அன்று இரவு 8.45 மணியளவில் திரு.நித்திய என்கிற நித்தியராஜ் ஆண் வயது 22 த/பெ.சாம்ராஜ் என்பவரை உதவி ஆய்வாளர் திரு. அண்ணாமலை, கே–7 ஐசிஎப் காவல் நிலைய என்பவரால் ரிமாண்ட் தேவைக்காக மருத்துவ பரிசோதனைக்காக அழைத்துவந்தார். அவர் நல்ல சுயநினைவுடனும் பேசக்கூடிய தன்மையுடனும் இருந்தார். அவர் தனக்கு இரண்டு தோள்பட்டைகளிலும் வலி இருப்பதாக கூறினார். அவருக்கு வலது கண்ணில் உறைந்த ரத்தக் காயம் ஒன்று காணப்பட்டது. அவருக்கு தேவையான நுண்கதிர் படம் எடுக்கப்பட்டு எலும்பு சிகிச்சை பிரிவு மருத்துவருக்கும் கண் மருத்துவருக்கும் பரிந்துரை செய்தேன். நான் ஏற்படுத்திய விபத்து

பதிவேடு என்னிடம் காட்டப்படுவதுதான் அது **அ.சா.ஆ.5.** அ.சா.ஆ.5 ல் விபத்து பதிவேட்டில் Conscious, Oriented complaint of pain both shoulders known case of recurrent shoulder dis location X–ray both shoulders AP and Lateral View taken, SCH (Sub Conjectival hemorrage) Right eye. DAOS opthoal opinion என்று நான் கைப்பட எழுதியுள்ளேன். இது சம்மந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

known case of recurrent shoulder dis location என்றால் என்னவென்றால் தோள்பட்டை அடிக்கடி இறங்கும் நோய். Known என்று அவருக்கு தெரிந்து கூறியதை குறிப்பிட்டுள்ளேன்.

**<u>மறுவிசாரணை</u>** :- இல்லை.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |

DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.

**Spl.S.C.No. 1/2024**

PROSECUTION WITNESS No.15

| | |
|---|---|
| Name | : Dr.B.Senthil |
| Father's Name | : Balusamy |
| Age | : |
| Address | : |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 17th day of September, 2025.

எதிரிகள் ஆஜர்.

முதல் விசாரணை:–

நான் தற்போது எழும்பூர் அரசு கண் மருத்துவமனையில் நிலைய மருத்துவராக பணிபுரிகிறேன். இதற்கு முன்பு அரசு ராயப்பேட்டை மருத்துவமனையில் கடந்த 15.01.2012 அன்று அவசர சிகிச்சைபிரிவில் பணியில் இருந்தபோது அன்று மதியம் 1.25 மணியளவில் சுமார் 22 வயது மதிக்கத்தக்க நித்யா என்கிற நித்தியராஜ் C/O.superintendant of central prision II Puzhal, என்பவரை ஐசிஎப் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அண்ணாமலை என்பவர் அழைத்துவந்தார், மேற்படி நோயாளி கூறியவாறு மேற்படி நபர் ரிமாண்ட் பிரிசினராக ஏற்கனவே கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துமனையில் வலது தோள்பட்டை பாதிப்புக்காக அதற்கு முன்தினம் 14.01.2012 சிகிச்சை மேற்கொண்டதாகவும், அவர் ஏற்கனேவே நேடிவ் பேன்டேஜ் போடப்பட்டு இருந்தது.

அவருக்கு வலதுதோள்பட்டையில் வீக்கம் இருந்தது. கீழ்பாக்கம் மருத்துவமனையில் எலும்பு அறுவைசிகிச்சை நிபுணர் பரிசோதனை செய்துள்ளார். அவருக்கு நுண்கதிர்படம் எடுக்கப்பட்டுள்ளது அது நார்மல் என்று வந்துள்ளது. எலும்பு வைத்தியம் கொடுக்கப்பட்டது. மேற்படி நபர் அன்று புழல் சிறைக்கு அனுப்பி வைக்கப்ட்டார். மறுபடியும் 14.01.2012 அன்று அனுப்பி வைக்கப்பட்டார். அவருக்கு பொது மருத்துவ நிபுணர் கருத்துப்படி பிரேக்கியல் பிளக்சஸ் நரம்பு பாதிப்பு மற்றும் பல உள் காயங்கள் இருந்தன. எலும்பு சிகிச்கை நிபுணர் கருத்துப்படி கழுத்து எலும்பு Cervical Spine மற்றும் பிரேக்கியல் பிளக்சஸ் நரம்பு பாதிப்பு இருந்தது. அவருக்கு CT Brain எடுப்பதற்காக ராஜீவ் காந்தி பொது மருத்துவமனை தலைக்காயம் மற்றும் மூளை சிகிச்சை நிபுணர் அவரிடம் அனுப்பி வைக்கப்பட்டது.

ராஜீவ் காந்தி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு CT Brain எடுக்கப்பட்டது. அது நார்மல் என்று தெரிவிக்கப்பட்டது. மூளை சிகிச்சை நிபுணரால் சிகிச்சை அளிக்கப்பட்டது நோயாளி மருத்துவ சிகிச்சை முடிந்து விடுவிக்கப்பட்டார். அவர் 15.01.2012 அன்று மதியம் 1.25 மணியளவில் ராயப்பேட்டை மருத்துவமனைக்கு வந்தார். அப்போது மயக்கமாக இருப்பதாகவும், இரண்டு தோள்பட்டையில் கடந்த இரண்டு நாட்களாக வலி இருப்பதாகவும் கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது சுயநினைவுடன் இருந்தார், பேசும் நிலையில் இருந்தார், இருதயம் நுரையீரல் மற்றும் இரத்த அழுத்தம் நாடித்துடிப்பு, நல்ல நிலையில் இருந்தன. அவரை மருத்துவ நிபுணர் டாக்டர் சுலைமான் MD மற்றும் அறுவைசிகிச்சை நிபுணர் டாக்டர் திருநாவுக்கரசு மற்றும் எலும்பு சிகிச்சை நிபுணர் டாக்டர் ராம்பிரசாத் அவர்களிடம் சிறப்பு மருத்துவ கருத்துரைக்கும் மேற்படி பரிசோதனைக்காகவும் மற்றும் சிகிச்சை அளிக்க

உள்நோயாளியாக அனுமதிக்க அவர்களிடம் அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக நான் ஏற்படுத்திய விபத்துபதிவேடு நகல் **அ.சா.ஆ.6** விபத்து பதிவேடு நான் என் கைப்பட எழுதியது அதை டாக்டர் சேக் சுலைமான் மீரான் என்பவர் சான்றிட்டு வழங்கியுள்ளார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

14ம் தேதி நடந்த விவரங்கள் எனக்கு நேரடியாகத் தெரியாது நோயாளி கூறியதன் அடிப்படையில் அவ்வாறு எழுதியுள்ளேன். நோயாளி இரு சக்கர வாகனத்தில் வேகமாக சென்று சருக்கி விழும்போதோ, உயரமான சுவர்மீது ஏறும்போது தவறிவிழும்போதோ, அவருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்புள்ளதா என்றால் நோயாளி விழும் வேகம், திசை, மற்றும் உயரத்தை பொருத்தது. ஒரு நபரை பலர் துரத்தும்போது பதட்டத்தில் தடுமாறி விழ வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** :- இல்லை.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |

DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.

**Spl.S.C.No. 1/2024**

PROSECUTION WITNESS No.13

| | |
|---|---|
| Name | : Dr.Anantharaman |
| Husband's Name | : Chinnadurai, |
| Age | : |
| Address | : |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 17th day of September, 2025.

எதிரிகள் ஆஜர்.

முதல் விசாரணை:–

நான் ஓமந்துராரார் மருத்துவக் கல்லூரி மருத்துமனையில் இணை பேராசிரியராக பணிபுரிந்து விருப்ப ஓய்வில் 2021ல் சென்றுள்ளேன், நான் தற்போது தனிப்பட்ட முறையில் கிளினிக் வைத்து நடத்தி வருகிறேன். 14.01.2012 அன்று கீழ்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எலும்புமுறிவு சிகிச்சை பிரிவில் DAOS ஆக பணிபுரிந்தபோது, CMO அனுப்பி வைத்த நித்தியராஜ் என்பவரை பரிசோதித்து பார்த்தேன். அப்போது அவர் தனது இரண்டு தோள்பட்டையிலும் வலி இருப்பதாக கூறினார். சிராய்ப்பு காயங்கள் இரண்டு எல்போ பகுதிகளிலும் காணப்பட்டது. தோள்பட்டை பகுதியில் நுண்கதிர் படம் எடுத்துப் பார்த்தபோது நார்மலாக இருந்தது. அதனால் எலும்புமுறிவு சிகிச்சை எதுவும் தேவையில்லை என்று CMO விடம்

அனுப்பிவைத்தேன். இது சம்மந்தமாக நான் பதிவு செய்த புறநோயாளி அனுமதிச்சீட்டு **அ.சா.ஆ.4.** அந்தப் புறநோயாளி சீட்டில் patient brought by police on remand. Complaint of pain both shoulders old case of ? Dis location right shoulder patient is on native bandage to right shoulder details not available on examination tenderness and swelling both shoulders arm and fore arm no deformity range of movements restricted at both shoulders active finger flextion + abrasion both elbows x–ray both shoulder NAD advise nil ortho intervention needed at present. என்று நான் கூற எனது உதவியாளர் டாக்டர் சுரேஷ் ஆனந்த் எழுதியுள்ளார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் எலும்புபிரிவு மருத்துவர் என்பதால் நித்தியராஜுக்கு தலைப்பகுதியில் பரிசோதனை எதுவும் செய்யவில்லை. தலைசம்மந்தப்பட்ட காயங்களுக்கு பொது அறுவை சிகிச்சை மருத்துவர் மற்றும் நீயூரோ அறுவைசிகிச்சை நிபுணர் ஆகியோர்தான் பரிசோதித்து சிகிச்சை அளிப்பார். நேடிவ் பேன்டேஜ் என்பது சித்தவைத்திய சாலைகளில் போடக்கூடியது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** :- இல்லை.

| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
|---|
| **Principal Judge** |